தமிழ்நாடு அரசு
இந்து சமய அறநிலையத்துறை

# அருள்மிகு கண்டேஸ்வரர் சுவாமி திருக்கோயில்,

## தாமரங்கோட்டை, பட்டுக்கோட்டை வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

## வேலை வாய்ப்பு அறிவிப்பு

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், தாமரங்கோட்டை அருள்மிகு கண்டேஸ்வரர் சுவாமி திருக்கோயிலில் உள்ள ஓதுவார் பணிக்காக இந்து மதத்தை சார்ந்த தகுதியான நபர்களிடமிருந்து நேர்காணல் மூலம் இந்து சமய அறநிலைய சட்ட விதிகளுக்குட்பட்டு பணி நியமனம் செய்ய கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு 22.05.2023 மாலை 5.45 மணி வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

| பதவியின் பெயர் | ஊதியம் விகிதம் | காலி பணியிடம் எண்ணிக்கை | குறைந்தபட்ச தகுதிகள் |
|---|---|---|---|
| ஓதுவார் | Category-VIII<br>Pay Matrix II<br>5400 மற்றும் இதர படிகள் | 1 | தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். தேவாரம் பாடத்திற்கான தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட தேவார பயிற்சி பள்ளியில் அல்லது தனியார் தேவார பயிற்சி பள்ளியில் 3 ஆண்டுகள் படிப்பில் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். |

1. விண்ணப்பதாரர் 1.08.2022 அன்று 18 வயது பூர்த்தி அடைந்தவராகவும் 35 வயது மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். இந்து மதத்தை சார்ந்தவராகவும் இறை நம்பிக்கை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பத்துடன் கல்வித்தகுதி குறித்து சான்றிதழ் மற்றும் பிற ஆவணங்களுக்கு சான்றிட்ட ஜெராக்ஸ் நகல் மட்டுமே அனுப்பப்பட வேண்டும் அசல் சான்றிதழ் எக்காரணத்தை கொண்டும் அனுப்பக்கூடாது.
3. விண்ணப்பதாரர் வசிக்கும் எல்லைக்குட்பட்ட காவல் நிலையத்தில் விண்ணப்பதாரர் மீது எவ்வித குற்றவியல் நடவடிக்கை ஏதும் இல்லை என்று சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.
4. விண்ணப்பங்களை அனுப்பும் போது மேல் உறையின் மீது பதவியின் பெயரை குறிப்பிட்டு பதிவு அஞ்சலில் அனுப்பப்பட வேண்டும். நேர் முகத்தேர்வில் கலந்து கொள்வதற்கு எவ்வித பயணப்படியும் வழங்கப்படமாட்டாது.
5. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 22.05.2023 மாலை 5.45 மணிக்குள் நிர்ணயிக்கப்பட்ட கடைசி நாளுக்கு பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது. மேலும் தகுதியான விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.
6. விண்ணப்பப்படிவம் இத்திருக்கோயில் அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில் வேலை நேரத்தில் ரூ.100/- செலுத்தி நேரில் பெற்றுக் கொள்ளலாம்.
7. தெய்வீகத்தாலும், ராஜீகத்தாலும் ஏற்படும் மாற்றங்களுக்கு நிர்வாகம் பொறுப்பல்ல.
8. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி செயல் அலுவலர், அருள்மிகு கண்டேஸ்வர சுவாமி திருக்கோயில், தாமரங்கோட்டை, பட்டுக்கோட்டை வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

**க.ஜெயசித்ரா**
தக்கார்

**இ.வடிவேல்துரை**
செயல் அலுவலர்.